பக்கங்கள்:-24

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 21 | ஞாயிற்றுக்கிழமை | 02.02.2025 | அதிர்வு 184 |
|---|---|---|---|---|---|

## முன்னாள் அமைச்சர்கள் சிலர் கைதாகும் நிலை

கடந்த அரசுகளின் காலத்தில் நடைபெற்ற மோசடி, சட்டவிரோத சொத்துக் குவிப்பு விடயங்களுடன் தொடர்புடைய சில வழக்குகள் தற்போதைக்குத் தூசு தட்டப்பட்டுள்ளன என்று 06▶




# தமிழ்த் தேசத்தின் குரலாக ஒலித்த மாவையின் இறுதி நிகழ்வு இன்று

## அனைவரையும் பங்கெடுக்குமாறு சிறீதரன் அழைப்பு



(எஸ்.நிதர்ஷன்)

“தமிழ்த் தேசத்தின் குரலாகவும், தமிழ் மக்களின் குரலாகவும் நீண்ட காலம் பயணித்த மாமனிதரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவருமான மாவை. சோமசுந்தரம் சேனாதிராஜாவின் இறுதிக்கிரியை நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன. இதில் அனைவரையும் பங்கெடுக்குமாறு அன்புடனும் உரிமையுடனும் கேட்டுக்கொள்கின்றோம்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. தெரிவித்தார். 07▶



## தமிழரசைக் காப்பாற்ற பதில் மும்மூர்த்திகளும் பதவி விலக வேண்டும்!

### இப்படி முன்னாள் எம்.பி. சிவமோகன் வலியுறுத்து

(கி.வசந்தன்)

“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் விழலுக்கு இறைத்த நீராகத் தம் இனத்தையே அழிக்கும் கோடலிக் காம்பின் கையில் கிடைத்துள்ளது. தமிழரசுக் கட்சி காப்பாற்றப்பட வேண்டுமாக இருந்தால் பதில் மும்மூர்த்திகளும் பதவி விலக வேண்டும்.” 06▶




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் அமரர் மாவை சேனாதிராஜாவின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெற இருக்கின்றன.

இப்போதைய நிலையில் தமிழர் அரசியலில் மிக மூத்த – முக்கிய – அரசியல்வாதியாகக் கருதப்பட்டவர் மாவை சேனாதிராஜா. அதனால் அவர் மறைவையொட்டி எழுந்துள்ள உணர்வெழுச்சியைக் கட்சித் தரப்புக்கள் தங்களது கீழ்த்தர அரசியல் லாபங்களுக்குப் பயன்படுத்தாமல், அமரருக்கு கௌரவம் அளிக்கும் விதத்தில் இந்த இறுதிக்கிரியைகளை இன்று நடத்தி முடிக்க வேண்டும். அதுதான் அவரின் குடும்பத்தவர்களின் எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது.

ஆனால் அரசியல் காழ்ப்புணர்ச்சியைச் சாதகமாகப் பிரயோகிப்பதற்கு ஒரு தலைவரின் மறைவை ஒட்டிய இறுதி நிகழ்வைப் பயன்படுத்த சில சக்திகள் திட்டமிட்டு இருக்கின்றன எனத் தொடர்ந்து பேச்சுகள் அடிபட்டு வருகின்றன.

நேற்றுப் பகல் கட்சியின் துணைச் செயலாளரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன், 05▶

# எனது நீதித்துறை வாழ்க்கை புரியாத புதிராக முடிவுறுகிறது

## மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் ஆதங்கம்




**(கி.வசந்தன்)**

புரியாத புதிராக எனது நீதித்துறை வாழ்க்கை முடிவுறுகிறது என வவுனியா மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி மாணக்கவாசகர் இளஞ்செழியன் ஆதங்கத்துடன் தெரிவித்துள்ளார்.

வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தலைமையில், வவுனியா ஈரப்பெரியகும் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதியில் ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியாவில் நீதிவானாக 9 ஆண்டுகள், வவுனியாவில் மேல் நீதிமன்ற நீதிபதியாக 3 ஆண்டுகள் கடமை புரிந்துள்ளேன். திருகோணமலையில் 2008 - 2010 இல் மேல் நீதமன்ற ஆணையாளராகவும், மீண்டும் 2012 - 2014இல் திருகோணமலை மேல் நீதிமன்ற ஆணையாளராகவும், 2018-2022 மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் 8 ஆண்டுகள் கடமை புரிந்துள்ளேன்.

ஒன்றரை ஆண்டுகள் மாவட்ட நீதிபதியாகவும், ஒன்றரை ஆண்டுகள் மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் என 3 ஆண்டுகள் கல்முனையில் கடமையாற்றியுள்ளேன்.

நான் பிறந்த மண் யாழ்ப்பாணத்தில் 2015 முதல் 2018 வரை மூன்றரை ஆண்டுகள் மேல் நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றியுள்ளேன். மட்டக்களப்பில் சிவில் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக ஒராண்டு கடமை புரிந்துள்ளேன்.

எனது முதல் நியமனம் வவுனியா நீதிவான் நீதிமன்றம். வவுனியாவில் மேல் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்பாட்டில் ஈடுபட நீதிச்சேவை ஆணைக்குழுவால் 40 நாழ்ல்கள் நியமிக்கபட்டு, அதன் பின் மன்னார் மாவட்ட நிரந்த நீதிவானாக சென்று 1997-2000 ஆண்டு வரை 3 ஆண்டுகள் கடமையாற்றி மீண்டும் வவுனியாவிற்கு நீதிவானாக வந்தேன்.

தீர்ப்புக்கள் பற்றி நான் பேச விரும்பவில்லை. அது என்னுடைய கடமை. இருப்பினும் வருகின்ற 05.02.2025 இல் எனது 28 ஆண்டுகள் நீதிச்சேவை சேவைகள் முடிவுறுத்தப்படவுள்ளது. முதல் நிலை நீதிமன்ற நீதிபதியாக எனது நீதிச் சேவை முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆனால், மேல நீதிமன்ற நீதிபதிகள் 90 பேர் இருக்கிறார்கள். அதில் முதலாவது இலக்கத்தில் நான் இருக்கின்றேன்.

நீதியரசர்கள் நியமனத்துக்கான உயர் நீதிமன்ற தீர்ப்பு 12.12.2024 இல் பிறப்பிக்கப்பட்டது. அனைத்து தடைகளும் விலக்கப்பட்டன. 12.01.2025 இல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இருந்து 4 நீதிபதிகள் உயர் நீதிமன்றத்திற்காக பதவி உயர்தப்பட்டார்கள். மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் 4 வெற்றிடங்கள் உள்ளன.

12.01.2025 இல் இருந்து அதற்கு தகமையானவன் நான். நான் தகமையாலும், இலக்கம் 1 இன்றில் இருப்பதாலும் நான் தகுதியானவன். எனது பிறந்த தினம் ஜனவரி 20 ஆகும். மேல் நீதிமன்றம் 61 வயதை அடையும் போது முதல்நிலை நீதின்ற நீதிபதி பதவி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

காலத்தின் சோதனை, முடிவு இறுதிப்படுத்தப்படவில்லை எனவும் கூறுகிறார்கள். இறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் கூறுகிறார்கள். 28 ஆண்டுகள் கடமை புரிந்தேன். புரியாத புதிராக எனது நீதித்துறை வாழ்க்கை முடிவுகிறது.

வேதனையா, சோதனையா, சாதனையா எதுவும் புரியவில்லை. அனைத்தும் நல்லதிற்கே என மனதை திருப்திப்படுத்தக் கூட முடியவில்லை. ஆனால் இன்று பெருவிழாவை வவுனியா சட்டத்தரணிகள் சங்கம் ஒழுங்கமைத்து வடக்கு - கிழக்கு நீதிபதிகள், சட்டத்தரணிகள் இங்கு வருகை தந்ததையிட்டு உங்கள் நன்றி உணர்வை மதிக்கிறேன். நீங்கள் அருகில் நிற்கும் போது எனக்கு புத்துணர்வு வருகிறது. இன்னும் சாதிக்க வேண்டும், சாதனைகள் புரிய வேண்டு என்ற உணர்வு உள்ளுணர்வாகக் கிளம்புகின்றது.

இருப்பினும், சந்தோசமாக போவதற்கு நான் தயார். ஆனால் 2024 மே மாதம் 13 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிபதியாக நான் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். வழக்குகள், தடையுத்தரவுகள் காரணமாக பின்னுக்கு சென்று வீடு செல்வதற்கு 8 நாள்கள் இருக்கின்ற நிலையில், நமது நாட்டுத் தலைவர் சீனா புறப்பட்டார். ஞாயிறுக்கிழமை உயர் நீதிமன்றநீதியரசர்கள் சத்திய பிரமாணம் இடம்பெறுகிறது.

12.01.2025 ஞாயிற்றுக்கிழமை. 13 ஆம் திகதி திங்கள் போயா. 14 ஆம் திகதி செவ்வாய் பொங்கல். திங்கள் இரவு ஜனாதிபதி சீனா பயணம். வெள்ளிக்கிழமை இரவு சீனாவில் இருந்து திரும்பி வந்தார். 18,19 விடுமுறை நாள். 19.01.2025 அன்று எனது இறுதி நாள். காலதாமதத்திற்கு நான் காரணமல்லன். காலதாமதம் என்னை ஒய்வு எடுக்க அனுப்பியது. காலதாமதமான நீதி மறுக்கப்பட்ட நீதி என்று நான பல இடங்களில் பேசினேன். அந்த நீதி என் மீதும் தொடுக்கப்பட்டுள்ளது. எதையும் ஏற்றும் கொள்ளும் மனோபாவம் வர வேண்டும்.

எனக்கு என்னை பற்றி பெரிதாக கவலையில்லை. எனது இரு குழந்தைகள், குடும்பத்தினர், உறவினர்கள், அவர்கள் வேதனைப்படுவதுதான் கவலை. வீடு வேதனைப்படுகிறது. கண்முன்னே அனைத்தும் நடைபெறுவதை அனைவரும் பார்க்கிறார்கள். நீதி கேட்டு எங்கும் செல்ல முடியாத நிலைமை.

நீதிவான், மாவட்ட நீதிபதி, மேல் நீதிமன்ற நீதிபதி தலைவணங்காத ஒரு தொழில். அதற்கு மேல் செல்ல வேண்டுமானால் தலைகளும் ஒரு கணம் வணங்கும். அவற்றால்தான் இலக்குகள் தீர்மானிக்கப்படுகின்றன. இதுவரை என்னுடன் ஒரு நாடாளுமன்ற உறுர்பினரோ, அமைச்சரோ கதைத்ததில்லை. இப்பொழுதும் அனைவரும் எனக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கிறார்கள். இதுதான் நிலமை.

எனவே, இந்த நிகழ்வுக்கு வருகை தந்த நீதிபதிகள், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களை பிரதிநிதித்துவப் படுத்தி கலந்து கொண்ட அனைத்து சட்டத்தரணிகளும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். - எனத் தெரிவித்தார்.




# போக்குவரத்து விதிகளை மீறிய 31,905 சாரதிகள் மீது நடவடிக்கை

போக்குவரத்து விதிகளை மீறிய 31,905 வாகன சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் 11 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடுமுழுவதும் உள்ள 607 பொலிஸ் நிலையங்களில் உள்ள பொலிஸாரால் இந்த சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன் போது மது அருந்திவிட்டு வாகனம் செலுத்திய குற்றத்தின் கீழ் 3,876 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் .

மேலும் கவனக்குறைவாக வாகனம் செலுத்திய குற்றத்தில் 190 சாரதிகள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பெருந்தோட்ட மக்களுக்கு இந்த ஆண்டில் 5,400 வீடுகள்



பெருந்தோட்ட மக்களுக்காக இந்த ஆண்டு இறுதிக்குள் 5,400 வீடுகள் நிர்மாணிக்கப்படும் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வீடமைப்பு திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீட்டுத் திட்டங்களை இந்த ஆண்டுக்குள் நிறைவு செய்ய வேண்டும்.

இதன்படி, இந்த ஆண்டுக்குள் 4,700 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட வேண்டும் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

# மின்கட்டண திருத்தம் தொடர்பான கால அவகாசம் போதவில்லை

## இலங்கை மின்சார பாவனையாளர்கள் சங்கம் குற்றச்சாட்டு




புதிய ஜனநாயகவாத மின்சார சட்டம் கொண்டு வரும் விடயத்தில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளதாக இலங்கை மின்சார பாவனையாளர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது அந்த சங்கத்தின் தேசிய செயலாளர் சஞ்சீவ தம்மிக இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மின்சார சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் சஞ்சீவ கோரிக்கை விடுத்துள்ளார்.

2024ஆம் ஆண்டின் 3 6ஆம் இலக்க மின்சார சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த மின்கட்டண திருத்தம் தொடர்பில் மக்களின் கருத்துகளை முன்வைக்குமாறு மின்சக்தி அமைச்சின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றிலும் வெளிப்படுத்தாமல் வெறுமனே இணையத்தளத்தில் மாத்திரம் குறிப்பிட்டுள்ளதாக சஞ்சீவ தம்மிக குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன் மக்களின் கருத்துகளை முன்வைப்பதற்கான திகதி எதிர்வரும் 7ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

இதற்காக வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் போதுமானதாக இல்லை என இலங்கை மின்சார பாவனையாளர்கள் சங்கத்தின் தேசிய செயலாளர் சஞ்சீவ தம்மிக தெரிவித்துள்ளார்.

# மஹிந்த உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேற எழுத்து மூலம் அறிவிக்கப்படாது

## சுனில் வட்டகல தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவுக்கு தமது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறுவதற்கான எழுத்துப்பூர்வ அறிவிப்பு விடுக்கப்படாது எனவும் அதற்காக ஒரு சட்டத்தை கொண்டுவருவதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்துடன் தொடர்புடைய நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது மஹிந்த ராஜபக்ஷவுக்கு அந்த இல்லத்திலிருந்து வெளியேறுவதற்கு போதிய அவகாசம் உள்ளது.

எதிர்வரும் காலங்களில் நாடாளுமன்றத்தில் விசேட சட்டமூலமொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு சட்டமாக அமுலாகும் பட்சத்தில் அந்த சட்டத்துக்கு உட்பட்டு மஹிந்த ராஜபக்ஷவுக்கு மேற்படி இல்லத்திலிருந்து வெளியேற வேண்டியேற்படும்." – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி சயந்தன் போன்றவர்கள் நேரில் சென்று மாவைக்கு அஞ்சலி செலுத்தி வந்தனர்.

நேற்று முன்னிரவு அஞ்சலி செலுத்த சென்ற முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கமலேஸ்வரன் அஞ்சலியை முடித்துக் கொண்டு வெளியே வந்த சமயம் ஆறு பேர் கொண்ட கும்பலொன்றினால் வழிமறிக்கப்பட்டிருக்கிறார். அவரோடு அக்குழுவினர் தர்க்கப்பட்டிருக்கின்றனர். அவரும் விடாது வாயடித்து, தேவைப்பட்டால் அதைத் தாண்டி செயல்படவும் துணிச்சலோடு முன் வந்தார் எனத் தெரிகிறது. ஆயினும் வன்முறைகள் இடம் பெறவில்லை.

கடைசியாக இடம்பெற்ற கட்சியின் மத்திய குழு கூட்டங்களில் மாவை சேனாதிராஜாவுக்கு எதிரான அரசியல் நிலைப்பாட்டை கட்சிக்குள் கமலேஸ்வரன் எடுத்தாராயினும், அவருக்கும் மாவைக்கும் இடையிலான ஊடாட்டம் மிகவும் அன்னியோன்யமானது. நீண்ட சரித்திரம் கொண்டது. எனக்கு அவை பற்றித் தெரியும். பல சமயங்களில் நெருக்கடியில் இருந்த மாவைக்கு நண்பராக உதவியவர் கமலேஸ்வரன். மாவை சேனாதிராஜா உயிரோடு இருந்தால் கூட கமலேஸ்வரன் மீது ஒரு கீறல் படக்கூடாது என்று உறுதியாக இருப்பார் என எனக்கு நன்கு தெரியும். அப்படிப்பட்டவருக்கே நேற்று இத்தகைய அனுபவம் கிடைத்திருக்கிறது.

கட்சியின் பெயரால் அடாவடித்தனம் பண்ணும் போக்கு இத்தோடு – இன்றோடு – அடங்கும் என்று நம்புகிறேன்.

இன்று இறுதி நிகழ்வுகளுக்காக பெரும் எண்ணிக்கையில் மக்கள் கூடும் போது அதையே சாட்டாக வைத்து கைவரிசைகள் காட்ட முயற்சி எடுக்கப்படலாம். ஆனால் அத்தகைய முயற்சி பலரின் அரசியலுக்கு நிரந்தர சாவு மணியாகிவிட்டாலும் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

\+ \+ \+

ஓர் ஊடகவியலாளனாக பல சமயங்களில் நாங்கள் நெருக்கடிகளை சந்திப்பதுண்டு. அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள், இராஜதந்திரிகள், மூத்த அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் நட்புறவோடு பேசும் போது முக்கிய விடயங்களை 'ஓவ் த ரெக்கோர்ட்' என்ற கரிசனையோடு சொல்லிவிடுவார்கள். அத்தகைய உரிமையோடு அவர்கள் சொன்ன விடயங்களை – அவர்களைக் கோடி காட்டி அம்பலப்படுத்தி எழுதுவது ஊடக தர்மம் அன்று. ஆனாலும் அவற்றை எழுதாமலும் இருக்க முடியாது. வேறு வழியில் விடயத்தை அம்பலப்படுத்த – எழுத – வாய்ப்புப் பார்த்துக் காத்திருப்போம்.

அப்படியான ஒரு சந்தர்ப்பம் இப்போது வந்திருக்கிறது. அதனை இன்று பிரஸ்தாபிப்பது பொருத்தம் என்று நினைக்கிறேன்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்த சமயத்தில் – ஆரம்பத்தில் – 2006 இல் – அச்சமயம் இராணுவ ரீதியில் வலிமை பெற்று, மேலாதிக்க நிலையோடு,



பல தாக்குதல்களை நடத்தி வந்த விடுதலைப் புலிகளுடன் சமரசம் செய்ய அவர் முயற்சித்தார். அது தொடர்பில் சில ஊடாட்டங்களில் நான் சம்பந்தப்பட்டிருந்தேன். அவருக்கும் விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் இடையில் சில செய்திப் பரிமாற்றங்களை நட்புறவு ரீதியில் நான் எடுத்துச் சென்றேன் என்பது பலருக்கும் தெரிந்த விடயம்தான்.

பிற்காலத்தில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசின் கீழ் மிக மோசமான நெருக்கடிகளையும், அழுத்தங்களையும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் சிறைவாசத்துடன் கூடிய சித்திரவதைகளையும் கூட நான் எதிர்கொண்டேன். ஆயினும் அரசியல்வாதியான மஹிந்த ராஜபக்ஷவுக்கும் பத்திரிகையாளனான எனக்கும் இடையில் சுமுகமான ஊடாட்டம் இன்று வரைத் தொடர்ந்து நீடித்தே வருகின்றது.

இந்தப் பின்புலத்தில் அவரை இப்போதும் நட்புறவுடன் நான் அவ்வப்போது சந்திப்பதுண்டு. இப்போது அவர் அரசியலில் செல்வாக்கு பெற்றவராக இல்லை. அரசியலில் முழு ஈடுபாட்டில் அவர் இருக்கின்றார் என்றும் எனக்குத் தெரியவில்லை. பெரும்பாலும் ஓர் ஓய்வு நிலை அரசியல்வாதி போல தொடர்ந்து அவர் இயங்குகின்றார். வயது மூப்பும், மறதியும், தளர்ச்சியும் இயல்பாகவே அவரைத் ஆள்கொண்டுவிட்டன.

இந்தப் பின்புலத்தில் நேரம் கிடைக்கும் போது என்னோடு நட்புறவான பேச்சுகளில் அவர் ஈடுபடத் தவறுவதில்லை.

அப்போதெல்லாம் பழைய விடயங்களை – சம்பவங்களை – நாம் இரை மீட்பதுண்டு.

அண்மையில் ஒரு தடவை அவரது கொழும்பு விஜயராம இல்லத்தில் சுமார் ஒன்று, ஒன்றரை மணி நேரம் அவருடன் அளவளாவிக் கொண்டிருந்தேன். பழைய விடயங்கள் பற்றி பேச்சு திரும்பியது. யுத்த நெருக்கடி கால சம்பவங்கள் பற்றிப் பேசினார்.

விட்டத்தைப் பார்த்து ஏதோ யோசித்துக் கொண்டிருந்த அவர் திடீரென "என்னவென்றாலும் பத்து வயது அப்பாவிச் சிறுவனை அப்படி கொன்றமை பெரும் தவறு. அது ஏற்றுக் கொள்ள முடியாத குற்றம். சகிக்க முடியாத விடயம்" என்று தன்பாட்டில் கூறினார் மஹிந்தர். அதை கூறிய போது அவர் குரல் கரகரத்தது. ஆனால் கொன்றவர்கள் யார், கொல்லப்பட்டவர் யார் என்று அவர் விவரித்துக் குறிப்பிடவில்லை.

அவர் யாரைக் குறிப்பிடுகிறார் என்று நானும் நோண்டிக் கேட்கவில்லை. அவரும் விடயத்தைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆனால் அவர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் கொல்லப்பட்ட விடயத்தைத்தான் அப்படிக் கூறுகின்றார் என்பதை நான் சந்தேகத்துக்கு இடமின்றி உணர்ந்து கொண்டேன்.

அவர் அப்படித் திடீரெனக் கூறியமை எனக்கே அதிர்ச்சியாக இருந்தது. ஆனால் அது அவரது அடி மனதிலிருந்து வருகின்ற குற்ற ஒப்புதல் வாக்குமூலம் போல எனக்குப்பட்டது. உண்மையான வேதனை அவர் முகபாவத்தில் தோற்றியது.

வழமையாக அரசியலில் அவர் சிறந்த நடிகர். தந்திரமாக உரையாடிக் காய் நகர்த்தக் கூடியவர். பேச்சு வன்மையாளர். ஆனால் அன்று அவர் அப்படிப் பேசவில்லை என்பதை நானே உணர்ந்து கொண்டேன். அப்படி நடிப்புக்கு என்னுடன் பேச வேண்டிய தேவையும் அவருக்கு இருக்கவில்லை. தம்மை மீறி விடயங்கள் அரங்கேறிய அவலத்தில் அவர் அப்படிப் பேசுகின்றார் என்று எனக்குத் தோன்றியது.

ஆயினும் அந்தச் சிறுவனின் மரணம் நியாயப்படுத்த முடியாதது என்ற கருத்தில் அவர் தெளிவாக இருக்கின்றார் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

எனினும் அரசியல் கட்டாயங்கள் காரணமாக அவர் அதனைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை என்பதையும் நான் அறிவேன்.

தனது அரசின் தவறை அவரே ஒப்புக்கொள்ளும் விடயம் என்று எனக்கு அது பட்டது. நான் அது பற்றி அவரோடு மேலதிகமாக எதுவும் பேசவில்லை – ஒரு குற்றவாளியைப் பச்சாதாபத்தோடு பார்ப்பதைப் போல அவரைப் பார்த்தமையைத் தவிர.

அடுத்த விடயத்துக்குள் நாங்கள் நகர்ந்து கொண்டோம்.

ஒரு பத்திரிகையாளனாக செய்தி வெளியிடுவதானால் அடுத்த நாள் காலையில் "பிரபா மகனைக் கொன்றமை பெரும் குற்றம் என்று மஹிந்த ராஜபக்ஷ ஒப்புக்கொள்கிறார்" என நான் செய்தி எழுதி இருக்க வேண்டும். ஆனால் நட்புரிமையோடு தனிப்பட்ட ரீதியில் அவர் பேசிய விடயத்தை செய்தியாக்குவது தர்மம் இல்லை என்ற காரணத்தினால் அதை அடக்கிக் கொண்டேன்.

ஆயினும் மஹிந்த ராஜபக்ஷ அந்த விடயத்தை என்னிடம் கூறிய போது எனக்கு பக்கத்தில் சாட்சியாக முக்கியமான ஒருவர் இருந்தார். அவருடன் அங்கிருந்து புறப்பட்டு வரும் சமயமே அது குறித்துப் பேசினேன்.

"இன்று மஹிந்த ராஜபக்ஷ கூறிய விடயங்களை என்றோ ஒருநாள் நான் வெளிப்படுத்துவேன். அப்போது நீங்கள் சாட்சியாக எனக்கு இருக்க வேண்டும்" என்றேன்.

அவர் "நிச்சயமாக" என்று உறுதியாகப் பதிலளித்தார். இன்றும் அவர் சாட்சியமாக இருப்பார்.

சரி. ஓரிரு மாதங்களுக்கு முன்னர் நடந்த அந்த விடயத்தை இப்போது நான் ஏன் எழுதுகிறேன் என்ற கேள்வி உங்களுக்கு எழலாம்.

மஹிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ நேற்று யாழ்ப்பாணம் வந்து அமரர் மாவை சேனாதிராஜாவுக்கு அஞ்சலி செலுத்தினார்.

முன்னதாக நேற்று அவரை ஓர் ஊடகம் பேட்டி கண்டதாக அறிந்தேன். அந்தப் பேட்டியில் அவரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

"உங்களின் தந்தையார் மஹிந்த ராஜபக்ஷ தம்முடைய அரசியலில் வேதனைப்பட்ட நாள்கள் உண்டா? எப்போது என்று கூறுவீர்களா?" – என்று கேட்கப்பட்டதாக நான் அறிந்தேன். அதற்கு நாமல் ராஜபக்ஷ பதிலளித்திருக்கிறார்.

"ஆம். இரண்டு நாள்கள் – இரண்டு சம்பவங்கள் குறித்து – அவர் மிகவும் மன வருத்தப்படுவார். ஒன்று – கெப்பிற்றிக்கொலவையில் 50க்கும் அதிகமான மாணவர்கள் பயணித்த பஸ் ஒன்று விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்டதாகக் கருதப்படும் கிளைமோர் குண்டில் சிக்கி சிதறியது. அதில் உயிரிழந்த மாணவர்களின் நிலையை நேரில் சென்று பார்த்து மனம் துடித்தார் எனது தந்தையார். அடுத்த சம்பவம் யுத்தத்தின் இடையே புலிகளின் தலைவர் பிரபாகரனுடைய மகன் கொல்லப்பட்ட விடயம் என் தந்தையாரை ஆழமாகத் தாக்கியுள்ளது. யுத்தத்துடன் – ஆயுத மோதலுடன் – போருடன் நேரடியாகத் தொடர்பு இல்லாத அப்பாவிச் சிறார் ஒருவர் கொல்லப்பட்டமை குறித்து அவர் அடிக்கடி மனவருத்தம்

06

## இரகசியம் பரகசியம்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிப்பார்." – என்று நாமல் ராஜபக்ஷ கூறியிருக்கிறார் என அறிந்தேன்.

என்னிடம் நேரடியாக மஹிந்த ராஜபக்ஷ சொன்ன விடயத்தைத்தான் இப்போது நாமல் ராஜபக்ஷ அவிழ்த்து இருக்கிறார்.

இந்த சமயத்தில் என்னிடம் அவரின் தந்தையார் நேரடியாகப் பகிர்ந்த விடயத்தை நான் மக்களிடம் பகிர்வது சரியானதும் பொருத்தமானதும் என்று நினைத்தேன். அதனால் இன்று இங்கு அதனை உங்களோடு பகிர்ந்தேன். அவ்வளவுதான்!

---

## முன்னாள் அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரியவருகின்றது.

இதன்படி, முன்பு நடைபெற்ற ஊழல், மோசடி மற்றும் சட்டவிரோத சொத்துக் குவிப்பு விடயங்கள் தொடர்பில் வழக்குகள் பதியப்பட்டு, பின்னர் விசாரணைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வழக்குகளையே மீண்டும் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் நான்கு வழக்குகளின் விசாரணைகளை நிறைவு செய்துள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார், சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அவற்றை அனுப்பி வைத்துள்ளனர்.

மேலும் நான்கு வழக்குகள் தொடர்பான கோப்புகள் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும் மூன்று வழக்குகள் தொடர்பிலும் துரிதமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்குகள் தொடர்பில் முன்னைய அரசின் ஐந்துக்கும் மேற்பட்ட முன்னாள் அமைச்சர்கள் கைது செய்யப்படலாம் என்று தெரியவந்துள்ளது.

இந்நிலையில், நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து தீர்ப்பதற்கான புதிய திட்டத்தைத் தொடங்க நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு முடிவு செய்துள்ளது.

மாவட்ட நீதிமன்றங்களில் 33 ஆயிரத்துக்கும் அதிகமான காணி வழக்குகள் இருப்பதாக நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார குறிப்பிட்டார்.

பல தரப்பினரின் பங்கேற்புடன் இது தொடர்பில் ஆராயக் குழுவொன்று நியமிக்கப்படும் என்றும் நீதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

---

## தமிழரசைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மத்திய குழு உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட கிளைத் தலைவருமான வைத்தியர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு எனது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொண்டு சில விடயங்களைத் தெரிவிக்க வேண்டியுள்ளது.

இன்று அநுர கட்சியினர் வடக்கு மாகாணத்தில் ஊடுருவல் செய்து கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் எமது இனத்தின் போராட்டத்தை இனவாதமாக தென்னிலங்கையில் காட்டி அவர்களது உறுப்பினர்களை ஆயுதப் படையில் சேர்த்து எமது போராட்டத்தை முறியடிப்பதறகு முன்னின்றார்கள். அதுமட்டுமல்ல 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் ஒன்றாக இணைக்கப்பட்ட வடக்கு – கிழக்கு மாகாணங்களைப் பிரிக்க வழக்குத் தாக்கல் செய்தார்கள். இன்று அவர்கள் எமது தேசமெங்கும் வந்து தேசிய வீரர்கள் போல் தமது செயற்பாடுகளைச் செய்து வருகின்றார்கள்.

இதற்கு இடம் விட்டுக் கொடுத்தது யார்? தமிழர்கள் தமிழர்களாலேயே அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டதுதான் அவர்களுக்கு இடம் கிடைத்தது.

ஈழ விடுதலைப் போராட்டத்தைத் திசை மாற்றிய கூட்டம் தம் இனத்தையே வெட்டி வீழ்த்தும் கோடாலிக் காம்புகளாகத் தமிழரசுக் கட்சியை ஆக்கிரமித்து தவறான பாதையில் கொண்டு செல்ல முயல்கின்றார்கள். எனவே, அதில் இருந்து தமிழரசுக் கட்சியை மீட்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

மாவை சேனாதிராஜாவைப் பொறுத்தவரை அவர் 7 வருடங்கள் சிறையில் இருந்தவர்.7 வருடங்கள் என்றால் 2 ஆயிரத்து 500 நாட்கள் – 60 ஆயிரம் மணித்தியாலங்கள் சிறையில் இருந்துள்ளார். சிறைச்சாலை பற்றி உங்களுக்குத் தெரியும்.

இவ்வாறு பல கஷ்டங்களுக்கு மத்தியில் சிறையில் இருந்த மாவை சேனாதிராஜாவின் கால் தூசில் கூட இவர்களால் பிழை கண்டு பிடிக்க முடியாது. சிறையில் இருந்த காலத்தில் கூட உள ரீதியாக மக்களின் விடுதலைக்காக இருக்கின்றேன் என்ற எண்ணத்தில் இருந்தார். பலமான உள்ள எண்ணங்களுடன் இருந்த அவர் இறுதிக் காலத்தில் சூழ்ச்சிக் கூட்டத்தால் வீழ்த்தப்பட்டுள்ளார் என்பதுதான் உண்மை.

எனக்குத் தெரிந்த தகவலின்படி வைத்தியசாலைக்குச் செல்ல முன் மாலை அல்லது மதிய நேரம் இருவர் சென்றுள்ளனர். பதில் செயலாளர் சத்தியலிங்கம், பதில் தலைவர் சிவஞானம் ஆகியோரே சென்றுள்ளனர். அவர்கள் இருவரும் அவரை நேரடியாகச் சந்தித்துள்ளார்கள். அவர்கள் சந்தித்தபோது அவரது குடும்பத்தில் முக்கியமான எவரும் இருக்கவில்லை. அவர்கள் இருவரும் சந்தித்து வெளியேறிய பின் எனது நெருங்கிய நண்பர் கனடாவில் இருந்து வந்த சூரி சந்தித்துள்ளார்.

என்ன கதைத்தார்கள் என்பது யாருக்கும் தெரியாது. எப்படியான அழுத்தங்களைக் கொடுத்தர்கள் என்பதும் தெரியாது. அதைச் சொல்ல மாவை சேனாதிராஜா இன்று இல்லை. எனவே, அவர்கள்தான் இதனை வெளிப்படுத்த வேண்டும். அதுவரை வழமை போல் இருந்த அவர், அவர்கள் சந்தித்த பின்தான் வழமைக்கு மாறாகச் செயற்பட்டு இந்த நிலை வந்தது. வழக்குத் தாக்கல் கோவைகள் எடுக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

அதிகாலையில் மூளை நரம்பு வெடித்ததால் இந்த நிலை ஏற்பட்டது. நான் சொல்வது தவறாக இருந்தால் பகிரங்க மன்னிப்புக் கேட்கத் தயாராக இருக்கின்றேன். அந்த இருவரும் ஏன் சென்றீர்கள், என்ன கதைத்தீர்கள் என்பதை வெளிப்படுத்தத் தயாராக இருக்க வேண்டும்.

தேசியப் பட்டியல் மாவை சேனாதிராஜாவுக்கு கொடுத்திருக்கப்பட வேண்டும். கொடுத்திருந்தால் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்து தலைவர் விட்ட பாதையில் ஒரு தமிழர் அணியை அவர் செயற்படுத்தி இருப்பார். அதுதான் அவரது நோக்கமாகவும் இருந்தது. யாரையும் கட்சியை விட்டுக் கலைக்கும் எண்ணம் அவரிடம் இல்லை. போனவர்களையும் மீள இணைத்து தேசிய அமைப்பாக தமிழர்களை ஒருங்கிணைக்க வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

ஆனால் அவரது முயற்சி துரோகத்தால் தோற்கடிக்கப்பட்டது. பண்டார வன்னியன் காக்கை வன்னியனால தோற்கடிக்கப்பட்டது போல் மாவை சேனாதிராஜா நவீன காக்கை வன்னியர்களால் தோற்கடிக்கப்பட்டார் என்பதுதான் உண்மை.

வேட்புமனுத் தாக்கல் செய்யும் போது தேசியப் பட்டியல் இணைக்கப்பட வேண்டும். அது தவறினால் தேசியப் பட்டியல் நேரடியாகத் தேர்தல் திணைக்களத்துக்கு வழங்க வேண்டும். இது இரண்டும் செய்யப்படவில்லை. அது ஈ – மெயில் அனுப்பப்ப ட்டதாக கல்வி மான்களும், அதற்கு பொறுப்பானவர்களும் சொல்கிறார்கள். பட்டியல் அனுப்பியிருந்தால் முதலாவது பெயராக மாவை சேனாதிராஜாவின் பெயர் இருந்தது. தாங்கள் தோற்றுவிட்டால் அதனைத் தாங்கள் எடுப்பதற்காகச் சூழ்ச்சி செய்துள்ளார்கள். இந்த பற்றிய நடைமுறைகள் அவர்களுக்குத் தெரியாதா.

இது திட்டமிட்டு செய்யப்பட்ட சதி. அந்தச் சதி மூலம் அந்தத் தேசியப் பட்டியலை தாங்கள் எடுத்துள்ளார்கள். தேசியப் பட்டியல் விழலுக்கு இறைத்த நீராக தம் இனத்தையே அழிக்கும் கோடலி காம்பின் கையில் கிடைத்துள்ளது. வன்னியில் மூன்று மாவட்டங்கள் உள்ளது. வவுனியாவில் நேரடியாகத் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருக்குக் கிடைத்த வாக்கு 406. ஒரு கிராம சேவையாளர் பிரிவுக்கு ஒன்று கூட விழவில்லை. அப்படியான ஒருவர்தான் தேசியப் பட்டியல் எடுத்துள்ளார். இது ஒரு சூழ்ச்சி. யாருடைய வழிகாட்டலில் இதை எடுத்துள்ளார்கள் என அறிய வேண்டும். இந்த நிகழ்ச்சி நிரலின் பின் யார் இருக்கிறார்கள்என்பது தெரியாது.

தமிழரசுக் கட்சியை மீட்டு எடுக்க வேண்டுமாக இருந்தால் பதில், பதில், பதில் என்கின்ற மும்மூர்த்திகள் தங்களது பதவிளை விட்டு பதவி விலக வேண்டும். தமிழரசுக் கட்சியை சுமுகமாக இயங்க வழி விடவேண்டும்.

பொதுக் குழுவைத் தடை செய்த வழக்கைப் பின்வாங்கிக்கொள்ள வேண்டும். கூட்டத்தில் வாக்குறுதி வழங்கியது போன்று நிபந்தனையின்றி வழக்கை மீளப் பெற வேண்டும். இன்று நிபந்தனைகளை வைத்துள்ளார்கள். தமிழரசுக் கட்சியை மீட்டெடுக்க உதவ வேண்டும் என்பது தான் என்னுடைய அவா. அதுவே மாவை சேனாதிராஜாவின் ஆத்ம சாந்தியடைய வழிவகுக்கும். அல்லது தமிழரசுக் கட்சி உருக்குலைந்து விடும் என்பதே எங்களது ஆதங்கம்." – என்றார்.

# 88 தேசிய பாடசாலைகளில் அதிபர்களுக்கு பற்றாக்குறை




நாடளாவிய ரீதியில் உள்ள 88 தேசிய பாடசாலைகளில் அதிபர் சேவை தரம் ஒன்றுக்கான பற்றாக்குறை நிலவுவதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, இந்த வெற்றிடங்களுக்குத் தகைமை பெற்ற 79 அதிபர்கள் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படவுள்ளனர் என அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரையில் இசுருபாயவில் இந்த நேர்முகத்தேர்வு இடம்பெறவுள்ளது.

# முன்பிள்ளை பருவ அபிவிருத்தி தொடர்பில் தேசிய கொள்கையினை உருவாக்க திட்டம்



முன்பிள்ளை பருவ அபிவிருத்தி தொடர்பாக தேசிய கொள்கையொன்றை உருவாக்குவதற்கான முதல் சுற்று கலந்துரையாடல் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் இடம்பெற்றுள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்கல்வி அமைச்சில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் அதிகாரிகாரிகளும் இதில் கலந்துக்கொண்டனர் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அனைத்து முன்பிள்ளை பருவ அபிவிருத்தி நிறுவனங்களையும் ஒரே கொள்கையின் கீழ் செயற்படுத்துவதற்கு தேவையான கொள்கையை தயாரித்து, ஒன்றிணைந்த கொள்கையாக முன்வைத்து அமைச்சரவையில் அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அதிகாரிகளை பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

அடுத்த வருடத்தில் ஒன்று, ஆறு மற்றும் பத்தாம் தரங்களுக்காக புதிய கல்வி மறுசீரமைப்பை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் இந்த முன்பிள்ளை பருவ அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கையை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

# தும்பளை லூர்த்து மாதா திருத்தல வருடாந்த திருவிழா இன்று ஆரம்பம்

யாழ். மாவட்டத்தின் கத்தோலிக்க யாத்திரை தலங்களில் ஒன்றான பருத்தித்துறை, தும்பளை, லூர்த்து மாதா திருத்தல வருடாந்த திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தினசரி நவநாள் வழிபாடுகள் பிற்பகல் 4.30 மணிக்கு திருச் செபமாலையுடன் ஆரம்பமாகி ஆராதனைகள் இடம்பெறும்.

நற்கருணை விழா எதிர்வரும் 10 ஆம் திகதி புதன் கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு கரன் அடிகளார் தலைமையில் இடம்பெறும் இந்தத் திருத்தலப் பெருவிழாவில் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கு முதலாம் திருப்பலியும், காலை 7 மணிக்கு இரண்டாம் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும். தொடர்ந்து சுற்றுப்பிரகாரத்துடன் வருடாந்த உற்சவம் நிறைவு பெறும்.

## தமிழ்த் தேசியத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“கடந்த புதன்கிழமை காலமான தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தமிழ்த் தேசத்தின் குரல் – தமிழ் மக்களின் குரல் – மாமனிதர் – மாவை சேனாதிராஜாவின் புகழுடல் யாழ்ப்பாணம் – மாவிட்டபுரத்தில் அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

எம் தேசத்தின் குரலின் புகழுடலுக்குப் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அதன் பிரதிநிதிகள், பொது மக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இன்று ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. அதன்படி இன்று காலை 8 மணிக்கு மாவிட்டபுரத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் சமயக்கிரியைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு அஞ்சலி உரைகள் அவரது இல்லத்தில் ஆரம்பமாகும்.

அஞ்சலி உரைகள் நிறைவுற்ற பின்னர் மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானத்துக்குப் புகழுடல் எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த இறுதி நிகழ்வுகளில் அனைவரையும் பங்கெடுக்குமாறு அன்புடனும் உரிமையுடனும் கேட்டுக்கொள்கின்றோம்.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சீறாரைச் சீரழிக்கும் ஊடகம்

சமூக ஊடகங்களின் பயன்பாடு சிறுவர் தற்கொலைகள் அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளதாக இலங்கை சமூக மருத்துவர்கள் கல்லூரி (College of Community Physicians of Sri Lanka) தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் இருநூறுக்கும் மேற்பட்ட குழந்தைகள் தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவங்கள் பதிவாகியுள்ளன என அதன் தலைவரும் சமூக மருத்துவத்துறையின் விசேட மருத்துவ நிபுணருமான கபில ஜயரத்ன தெரிவித்திருக்கின்றார்.

“2022ஆம் ஆண்டில் 18 வயதுக்குட்பட்ட 133 குழந்தைகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அதிகாரப்பூர்வமற்ற தரவுகளின்படி, 2024ஆம் ஆண்டு 270 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இவை அனைத்திற்கும் பல்வேறு காரணங்கள் உள்ளன.” - என்று கூறும் அவர் இந்த விடயம் தொடர்பான மேலதிக தகவல்களை ஒரிரு வாரங்களில் வெளியிட எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

“இந்தத் தற்கொலைச் சம்பவங்களுக்குப் பின்னால் பல காரணங்கள் உள்ளன. சமூக ஊடகங்களின் தாக்கம் ஒரு சாத்தியமான தலையீடாக இருக்கலாம். சமூக ஊடகப் பயன்பாட்டை ஏதேனும் ஒரு வடிவத்தில் கட்டுப்படுத்துவது அவசியமாக - ஒரு தேவையாக - இருக்கும். சமூக ஊடகப் பயன்பாடு தொடர்பான சாத்தியமான நடவடிக்கைகள் குறித்த தகவல்களை நாங்கள் சேகரித்துள்ளோம். மேலும் அடுத்த வாரம் அல்லது இரண்டு வாரங்களுக்குள் கூடுதல் விவரங்களை வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்.” - என்றும் அவர் கூறினார்.

சமூக ஊடகங்கள் நன்மைகள் மற்றும் அபாயங்கள் இரண்டையும் கொண்டு வந்தாலும், தற்போது சிறுவர்களிடையே அதன் பயன்பாட்டை சிறப்பாக ஒழுங்குபடுத்தவும் அதன் தீங்கு விளைவிக்கும் விளைவுகளை குறைக்கவும் உதவும் பரிந்துரைகள் குறித்தும் கரிசனை காட்டப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

குழந்தைகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் நன்மைகள் மற்றும் தீமைகள் இரண்டும் உள்ளன. நாங்கள் இதை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது குறித்த பரிந்துரைகளை வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களைத் தடை செய்வதே இவற்றை தடுக்க எம்மால் இயன்ற முதலாவது செயற்பாடாகும். ஒரு நாடாக என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து ஆராய்ந்து வருகிறோம் என்றார் அவர்.

பல சமயங்களில் சிறுவர்களின் அசாதாண செயற்பாட்டிற்கு இந்தச் சமூக ஊடகப் பாவனையே வழிவகுத்துள்ளது என்பது ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

பல நாடுகளில் சிறுவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்த பல்வேறு தடைகள் - முழு அளவில் அல்லது பகுதியளவில் - அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் இலங்கையிலும் சமூக ஊடகங்களை சிறுவர்கள் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வயதுக்குவராத அல்லது பருவமடையாத சிறுவர்கள் சமூக ஊடகப் பாவனையில் மூழ்கி அதற்கு அடிமையாகிப் போவது ஒரு சமுதாயப் பிரச்சினையாக இப்போது முன்னெழுந்துள்ளது.

சிறுவர்களுக்கும் சமூக ஊடகங்களுக்கும் இடையிலான ஊடாட்டத்தை ஒழுங்கு முறைப்படுத்தி கட்டுப்படுத்தும் சாத்தியம் தற்போதைய சமூகச் சூழலில் இல்லை.

இதுவே சமூக ஊடகங்களுக்கு அடிமையாகி தவறான வழிமுறைகளை நோக்கி சிறுவர் மற்றும் இளம் சமுதாயம் நகரக்கூடிய ஆபத்தை நமக்குத் தந்து நிற்கின்றது.

சமூக ஊடகங்கள் வாயிலாக சிறுவர் மற்றும் இளம் சமூகம் எளிதில் சீரழிக்க கூடிய வாய்ப்புகள் தாராளமாக உள்ளன என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்தான்.

இந்த நெருக்கடியில் இருந்து நம் சிறுவர், சிறுமியர்களை பாதுகாப்பது என்பது நவீன உலகுக்கு சவாலான ஒரு விடயமாகத்தான் இருக்கப் போகின்றது.

மன மற்றும் உடல் ஆரோக்கியம் பற்றிய கவலைகளை மேற்கோள் காட்டி, சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்காக, சிறுவர்களுக்கு குறைந்த பட்ச வயது வரம்பை ஆஸ்திரேலியா நிர்ணயித்துள்ளமையும் கவனிக்கத்தக்கது.








# பிரமாண்டமாக ஆரம்பமானது முல்லை பிரீமியர் லீக் கிரிக்கெட்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிரிக்கெட் வீரர்களை அடையாளம் காணவும், அவர்களின் திறமையை உயர்த்தும் நோக்குடன் நடத்தப்படும் முல்லை பிரீமியர் லீக் கடின பந்து கிரிக்கெட் போட்டியானது நேற்று மாமூலை சுதன் சுதனா விளையாட்டு மைதானத்தில் பிரமாண்டமாக ஆரம்பமாகி இடம் பெற்றது.

விருந்தினர்கள், அணி வீரர்கள் அழைத்து வரப்பட்டு மங்களவிளக்கேற்றல், கொடியேற்றலை தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகியிருந்தன.

நேற்று இடம்பெற்ற இரு போட்டிகளில் ஆரம்ப போட்டியாக முல்லைவொறியர்ஸ் அணியும் முல்லை அக்னி அணியும் போட்டியிட்டிருந்தன.

முல்லை அக்னி அணியினர் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று களத்தடுப்பை தெரிவு செய்திருந்தனர். முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய முல்லை வொறியர்ஸ் அணியினர் 18.4 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 114 ஓட்டங்களை பெற்றிருந்தனர் . பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய முல்லை அக்னி அணியினர் 11.1 பந்து பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 118 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றிருந்தது. ஆட்ட நாயகனாக முல்லை அக்னி அணியினை சேர்ந்த ரி. தயானன் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இரண்டாவது போட்டியாக குருந்தூர், முல்லை டைமண்ட் அணிகள் போட்டியிட்டிருந்தன. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற குருந்தூர் அணியினர் முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்து 18.4 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 107 ஓட்டங்களை பெற்றிருந்தனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய முல்லை டைமண்ட் அணியினர் 14.5 பந்து பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 111 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றிருந்தனர். ஆட்ட நாயகனாக முல்லை டைமண்ட் அணியினை சேர்ந்த ரி.உதயநேசன் தெரிவு செய்யப்பட்டார்.

முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் போட்டி குழு தலைவர் எஸ்.ராஜகோபால் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண துடுப்பாட்ட சங்கத்தின் தலைவர் யோ.ரதீபன், சிறப்பு விருந்தினர்களாக முள்ளியவளை பொலிஸ் பொறுப்பதிகாரி அமரதுங்க, தண்ணீரூற்று மேற்கு கிராம அலுவலர் பகீரதன், கௌரவ விருந்தினர்களாக எம்.ஐ.றஜாப், ஏ.ஜே.டினேஸ் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் செயலாளர் வி.பிரதீபன், துடுப்பாட்ட சங்கத்தின் உறுப்பினர்கள், அணியின் உரிமையாளர்கள், முகாமையாளர்கள், அணி வீரர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.
















# தேர்தல் காலத்தில் விவசாயிகளுக்காக பேசிய அரசாங்கம் நெல்லுக்கான உத்தரவாத விலையை நிர்ணயிக்கவில்லை

## எதிர்கட்சி தலைவர் சஜித் குற்றச்சாட்டு

தேர்தல் காலத்தில் விவசாயிகளுக்கான சலுகைகள் தொடர்பில் அதிகம் பேசிய தேசிய மக்கள் சக்தி தற்போது நெல்லுக்கான உத்தவாத விலையைக் கூட நிர்ணயிக்க தவறியுள்ளதாக எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

குருநாகல் – ஹிரியால பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நெல் அறுவடை பணிகள் ஆரம்பமாகியுள்ளன. எனினும் அரசாங்கத்தினால் நெல்லுக்கான உத்தரவாத விலையை வழங்க முடியாது போயுள்ளது.

நெல் கொள்முதல் செய்ய பணம் ஒதுக்கப்பட்டாலும், ஒதுக்கப்பட்ட பணத்தில் நெல் கொள்முதல் செய்யப்படவில்லை.

கடந்த காலங்களில் தற்போதைய அமைச்சர்கள் சிலர் உர மானியம் மற்றும் நெல்லுக்கான உத்தரவாத விலை தொடர்பில் அதிகம் பேசி வந்தனர்.

தேர்தல் காலத்தில் 150 ரூபா உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படும் எனவும் அரசாங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, 2025 ஆம் ஆண்டு பெரும் போகத்தில் 2.5 மெட்ரிக் தொன் மற்றும் சிறு போகத்தில் 1.7 மெட்ரிக் தொன் என்றவாறு அரசாங்கம் நெல் அறுவடையை மதிப்பிட்டுள்ளது.

அத்துடன், பயிர் சேத நிவாரணம், காட்டு யானை – மனித மோதலால் ஏற்படும் பயிர் சேதம், கனமழை மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கான நிவாரணங்களை வழங்க அரசாங்கம் தவறிவிட்டது." – என்றார்.





# ஜனாதிபதி அநுரகுமார மீது வடக்கு மக்கள் நம்பிக்கை!

## அவர் முன்னிலையில் ஆளுநர் தெரிவிப்பு



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமைத்துவத்தின் மீது வடக்கு மக்கள் நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் வைத்திருக்கின்றார்கள் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பங்கேற்புடன் யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் பிரதம செயலர், அமைச்சுக்களின் செயலர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், அதிகாரிகள் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

வடக்கு மக்கள் சார்பாக ஜனாதிபதியை வரவேற்பதாகக் குறிப்பிட்ட ஆளுநர், ஜனாதிபதியின் தலைமைத்துவத்தில் இந்தப் பிரதேசத்தில் மிகப் பெரிய மாற்றம் நடைபெறும் என எதிர்பார்ப்பதாகவும், இந்தப் பகுதி மக்கள் அவர் மீது அதற்காக நம்பிக்கை வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஊழலற்ற ஆட்சி மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்ற நிலையில் அதை ஜனாதிபதி வழங்குவார் என நம்பிக்கையுடன் இருப்பதாகவும், அரசால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இதேவேளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் ஒவ்வொரு துறைசார் விடயங்களும் ஆராயப்பட்டிருந்தன. இதன்போது தேசிய வீடமைப்பு அதிகார சபையால் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டு அரைகுறை நிலையிலுள்ள வீடுகளுக்காக நிதி ஒதுக்கீடு தேவை என ஜனாதிபதியிடம் ஆளுநர் வலியுறுத்தினார். அதேபோல் யாழ். மாவட்டத்திலிருந்து கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட ரயில் சேவைகள் சில நிறுத்தப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டிய ஆளுநர் அதனை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை முன்வைத்தார்.

மேலும் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்களும், தனியார் பஸ்களும் ஒரேயிடத்திலிருந்து நெடுந்தூர சேவையை இணைந்த நேர அட்டவணையின் கீழ் ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஆளுநர், இலங்கை போக்குவரத்துச் சபையினர் அதற்கு ஒத்துழைக்கப் பின்னடிக்கின்றனர் என்பதையும் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுசென்றார்.





# மாவையின் புகழுடலுக்கு வடக்கு ஆளுநர் அஞ்சலி!

அமரத்துவமடைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவருமான மாவை சோ.சேனாதிராஜாவின் புகழுடலுக்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இறுதி அஞ்சலி செலுத்தினார்.

யாழ். மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்துக்கு நேற்று சனிக்கிழமை பிற்பகல் சென்று அன்னாரின் புகழுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்திய ஆளுநர், அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் அனுதாபங்களைக் கூறினார்.

# மாவைக்கு ரவிகரன் எம்.பி அஞ்சலி




(விஜயரத்தினம் சரவணன்)

இலங்கைத்தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் இறுதி அஞ்சலியில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளருமான துரைராசா ரவிகரன் பங்கேற்றார்.

# மாவை சேனாதிராஜாவின் மறைவு ஈழத் தமிழர்களுக்கு பேரிழப்பாகும்

## அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் இரங்கல்



(எஸ்.அஷ்ரப்கான்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதி ராஜாவின் மறைவு தமிழர் சமூகத்திற்கு பேரிழப்பாகும் என்று அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித் தார்.

சங்கத்தின் காரைதீவு தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற இரங்கல் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மறைந்த மூத்த தலைவர் மாவை சேனாதிராஜா தனது ஐந்து தசாப்த கால அரசியல் வாழ்க்கையில், அற வழிப் போராட்டம், சிறைவாசம் எனத் தமிழ் மக்களுக்களின் உரிமைக்காகக் குரல் எழுப்பி வந்தார். அவரின் மறைவு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும்.

அன்னாரது மறைவுச் செய்தி பெரும் மன வேதனையையும் ஆழ்ந்த கவலை யையும் ஏற்படுத்தியுள்ளது. அன்னா ரின் மறைவானது தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

1942 ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்த மாவை சேனாதிராஜா, அரசியல் மற்றும் பொதுச் சேவை ஆகியவற்றில் தனது வாழக் கையை அர்ப்பணித்திருந்தார். அவர் ஒரு சிறந்த அரசியல்வாதியும், திற மையான பேச்சாளரும், தைரியமான மனித உரிமைகள் செயற்பாட்டாள ருமாவார்.

மாவை சேனாதிராஜா தனது 19 ஆவது வயதில் அரசியல் பயணத்தைத் தொடங்கி தனது 83 ஆவது வயது வரை தமிழ் மக்களுக்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

போருக்கு முன்னரும் பின்னரும் அவரது அரசியல் செயற்பாடுகள் பல்வேறு பரிணாமங்களைக் கொண் டுள்ளன. அவர் தமிழ் மக்களுக்கு எதி ரான அடக்குமுறைகளை கண்டித்து போராடி சிறைவாசமும் அனுபவித்தவர்.

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக் காக துணிந்து குரல் கொடுத்த மாவை சேனாதிராஜா, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை ஏறக்குறைய 10, வருடங்கள் செயற்பட்டார்.

எமது அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் இவருக்காக இரங்கல் அஞ்சலி நிகழ்வை ஏற்பாடு செய்து, அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம். - என்றும் குறிப்பிட்டார்.

இங்கு சங்கத்தின் உறுப்பினர் கள் மற்றும் பொதுமக்களும் அவருக் காக இரங்கல் வழிபாடுகளில் ஈடுபட்ட னர்.













# மாவைக்கு நாமலும் நேரில் அஞ்சலி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் மறைந்த மாவை சேனாதிராஜாவின் பூதவுடலுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ நேற்று மாலை இறுதி அஞ்சலி செலுத்தினார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் உயிரிழந்த தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராசாவின் புகழுடல் தொல்லிப்பழை மாவிட்டபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அதன் பிரதிநிதிகளும் பொது மக்களும் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவும் நேரில் வருகைதந்து அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இதன்போது அவருடன் பெரமுனவின் யாழ் மாவட்ட பிரதம அமைப்பாளர் கீதநாத், கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் மதனவாசன் மற்றும் கட்சியின் வடமாகாண ஒருங்குணைப்பாளர்கள் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



# யாழ் மாவட்ட முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபோது கண் கலங்கிய தமிழ்த் தலவர் மாவை சேனாதிராஜா

## அனுதாப செய்தியில் ரிஷாட் பதியுதீன் தெரிவிப்பு

இனங்களுக்கப்பால் மனித நேயமே முதன்மை என்ற அடிப்படையில் தமது அரசியல் நகர்வுகளை முன்னெடுத்த மூத்த அரசியல்வாதியும் தமிழரசுக் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் மறைவு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அமரர் மாவை சேனாதிராஜா அவர்களின் மறைவு தொடர்பில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளதாவது:-

யாழ் மாவட்ட மக்களினை பிரதி நிதித்துவம் செய்து அவர்களின் பல்வேறு தேவைகள் தொடர்பிலும், அது போன்று அம்மக்களது பாதுகாப்பு தொடர்பிலும் தொடர்ந்தும் குரல் கொடுத்துவந்த ஒரு சிறந்த மனிதராகவும், அரசியல் ரீதியில் குறுகிய சிந்தனைகள் அற்ற பரந்த பார்வையைக் கொண்ட ஒருவராகவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் மாவை சேனாதிராஜா அவர்களை அடையாளம் காணுகின்றேன்.

குறிப்பாக வடபுல முஸ்லிம்களின் வெளியேற்றம், அதிலும் யாழ் மாவட்ட முஸ்லிம்களது வெளியேற்றத்தின் போது கண்ணீர் கலங்கிய ஒருவராகவும், இந்த வெளியேற்றத்தினை விரும்பாத ஓர் அரசியல் தலைவராக தனது சகோதர சமூகத்தின் உணர்வுகளிலும் இரண்டறக் கலந்த ஒருவராக அமரர் மாவை சேனாதிராஜா அவர்கள் இருந்துள்ளார்கள்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் இந்த இழப்பு தமிழ் பேசும் மக்களுக்கும், குறிப்பாக தமிழ் மக்களின் அரசியல் தீர்மானங்களிலும் பெரும் இடை வெளியைத் தோற்றுவிக்கும்.



– இவ்வாறு தெரிவித்துள்ள ரிஷாட் பதியுதீன் அவரது இழப்பால் துயர்வுறும் குடும்பத்தினருக்கும், அவரது ஆதரவாளர்களுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றார் எனவும் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.






# தமிழரசு தலைமை அலுவலகத்தில் கட்சியின் கொடி அரைக்கம்பத்தில்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மறைந்த மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு யாழ்ப்பாணம் மாட்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முதல் இடம்பெற்று வருகின்றது.

மாவை சேனாதிராஜாவின் திருவுருவப்படத்துக்கு மாலை சூட்டி மலர் அஞ்சலி செலுத்துவதில்



கட்சி உறுப்பினர்கள் நேற்று ஈடுபட்டனர்.

கட்சியின் மூன்றில்க்ல் கட்சி கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது.


மாவை சேனாதிராஜாவின் இறுதிக் கிரியைகள் நடைபெறும் இன்றைய தினத்திலும் கட்சி தலைமையகத்தில் உறுப்பினர்கள் திருவுருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டது.



# ரெலோவினர் மாவைக்கு அஞ்சலி

ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., அக்கட்சியின் முன்னாள் எம்.பியான கோவிந்தம் கருணாகரன் (ஜனா), கட்சியின் பேச்சாளர் சுரேந்திரன் குருசுவாமி ஆகியோர் நேற்று மாவை சேனாதிராஜாவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.








# சேனாதி(பதி) இல்லாத தமிழரசு



வி.எஸ்.சிவகரன்



தமிழினத்தின் கடந்த ஏழு தசாப்த கால இன விடுதலைக்கான போராட்டத்தில் பலரது வகிபாகங்கள் உள்ள போதிலும் சிலரது தடம் பதிப்புகள் காலத்தால் காவு கொள்ள முடியாத நினைவுகளை கொண்டுள்ளன.

தோன்றியவை யாவும் மறையும் என்பதே இயற்கை விதிக் கோட்பாடாகும். அதை எவராலும் மாற்றி விட முடியாது. பலர் இறந்து விடுகிறார்கள். சிலர் மட்டும் மரணித்துக் கொள்கிறார்கள் இறப்பவர்கள் மறக்கப்படுகிறார்கள். மரணிப்பவர்கள் நினைக்கப்படுகிறார்கள்.

காலம் பலரை கறிவேப்பிலை ஆக்கி விடுகிறது. சிலரை மட்டும்தான் கட்டுமரத்தில் ஏற்றி தாலாட்டுப் பாடுகிறது.

காலத்தின் கதாநாயகர்களாக கதாப் பிரசங்கம் இடக்கூடிய நவயுக புருஷர்களை இந்த ஈழ தேசம் தன் மடியில் சுமந்து, விடுதலை எனும் வீறு கொண்டு எழுந்து, இன்னுயிரை ஈழ மண்ணின் விடுதலைக்காக நாள் குறித்து, நேரம் குறித்து, திகதி குறித்து, ஈர்த்துக் கொண்டது.

அத்தனை தியாக வேள்வியில் தன்னை ஆகுதியாக்கிக் கொண்ட இந்த மண் பல புரட்சியாளர்களை பிறப்பித்துக் கொண்டே இருந்தது. தன் இளமைக் காலம் தொடக்கம் தன் வாழ்நாள் முழுவதையும் தமிழின விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்து நின்றவர் அவர். அவருடைய ஆரம்ப கால உணர்வெழுச்சிமிகு பேச்சுக்களும், தீவிர போராட்ட உணர்வு மற்றும் தமிழ் இளைஞர் பேரவையில் முன்னணி வகித்து இளையோரை உணர்ச்சி ஊட்டி பாங்கும் விடுதலை நோக்கிய களத்துக்கு வீறு கொண்டு புறப்பட வழிவகுத்தது.

தொடர்ச்சி▼

# சேனாதி(பதி) இல்லாத தமிழரசு

தொடர்ச்சி▲

தமிழ் இளைஞர் பேரவையில் கூடவே இருந்த காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், கோவை மகேசன், கரிகாலன் போன்றவர்கள் புலம்பெயர்ந்து போனாலும் மாவை சேனாதிராஜா களத்தை விட்டு அகலாமல் நின்று, நிலைத்து, நிதானமாக வருவதை எல்லாம் எதிர்கொண்டு, ஏழு ஆண்டுகளுக்கு மேல் சிறையையும் கண்டு, பலமுறை இறப்பின் கடைசி எல்லை வரை சென்று மீண்டவர்.

எண்பதுகளின் பிற்பகுதியில் கடுமையாக தாக்கப்பட்டு அவர் இறந்து விட்டார் என ஆனையிறவிலே வீசி விட்டுப் போனது இராணுவம். அதிலிருந்தும் அவர் பிழைத்துக் கொண்டார். அரசு மட்டுமல்ல, துணை ஆயுதக் குழுக்களும் அவரைப் பதம் பார்க்கத் தவறவில்லை.

இன விடுதலை அரசியல் இருப்பில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, தூய நோக்கு விசுவாசத்தோடு எழுந்த களப் போராளியாக மிளிர்ந்தவர். மிதவாத அரசியலுக்குள் புகும்போது அதே உணர்வையும், அரசியல் அறத்தையும், சத்தியத்தையும் காண முடியவில்லை என்பதே





அவர் மீதான விமர்சனத்தில் பிரதானமானவை.

“நெருப்பு கூட குளிர்ச்சியாகலாம். வேப்பெண்ணை தேனாகலாம். ஆனால் அரசியலில் பதவியேற்றவன் யோக்கியனாக இருக்க முடியாது” எனும் தந்தை பெரியாரின் கூற்று இவருக்கும் பொருந்தக் கூடியதாக மாறிவிட்டதோ? அதிகாரமும், பதவியும் யாரைத்தான் விட்டு வைத்தது? அதில் அரங்கேறியவர்கள் யாரும் விதிவிலக்குக்குட்பட்டவர்கள் இல்லை என்பதே பொது விதியாகவிருக்கிறது.

ஆனால் ஒரு காலத்தில் மாவை சேனாதிராஜா என்றால் தமிழரசுக் கட்சி, தமிழரசுக் கட்சி என்றால் மாவை சேனாதிராஜா என்கின்ற நம்பிக்கை நட்சத்திர கதாநாயகனாக இளையோர்கள் மத்தியிலும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களிடத்திலும் நெற்றியில் இரத்தத்தால் திலகமிட்ட களச் சூழலில் அவர் வலம் வந்த காலம் உண்டு.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் வடக்கு, கிழக்கு முழுமையாக அவர் கால் பதிக்காத இடங்கள் இல்லை. அமிர்தலிங்கத்துக்கு பின்னர், வடக்குக் கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தலைவராக அரசியல் செய்த ஒரே நபர் மாவை சேனாதிராஜாதான். இது மாத்திரமன்றி விடுதலைப் புலிகளின் தலைவரோடும் மிக நெருக்கமான உறவையும் நம்பிக்கையும் பேணிக்கொண்டவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தேர்தலுக்கு பயன்படுத்த முடியாமல் போனபோது 2004 ஆம் ஆண்டு தமிழரசு கட்சியின் வீட்டு சின்னத்தை உபயோகிக்க முற்பட்ட போது தலைவர் கேட்ட முதல் கேள்வி தமிழரசு கட்சிக்கு யார் செயலாளரென்று. சேனாதிராஜா என்றதும் மறுப்பே இல்லாமல் ஆமோதித்தாராம் தலைவர். அது மாத்திரமல்ல, அக்காலத்தில் சேனாதிராஜாவுக்கு ஒரு கடிதத்தையும் எழுதி இருந்தார். தங்களை நம்பியே இந்தக் கட்சியையும் சின்னத்தையும் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கிறேன் என. பிற்காலத்தில் அக் கடிதத்தை இப் பத்தியாளருக்கு சேனாதிராஜா காட்டியுள்ளார்.

அந்த அளவுக்கு ஈழ விடுதலை அற உணர்வில் பற்றுறுதியும் கொள்கை நிலைப்பாடும் குன்றாதவராக இருந்தார். அதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இரண்டாவது தமிழரசுக் கட்சியை வடக்கு, கிழக்கிலே நிலை நிறுத்தி கட்சியின் கிளைகளை அமைத்து அங்கத்தவர்களை சேர்த்ததில் அவரே முதன்மை வகித்தவர்.

இரா.சம்பந்தன் தலைவராக இருந்த போதும் கூட, திருகோணமலையின் கட்சி நடவடிக்கையும் சேனாதிராஜாதான் கவனித்தார். வடக்கு, கிழக்கில் உள்ள பலரை அரசியலுக்குள் உள்ளீர்த்து, அங்கத்தவர்களாக சேர்த்து அழகு பார்த்தவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கூட்டு கட்சிகளுடனும் முரண்படாமல் எல்லோரையும் அனுசரித்துப் போகக் கூடியவராக காணப்பட்டார். மிகவும் பொறுமையாகவும் நிதானமாகவும் வார்த்தைகளை அளந்து பேசக்கூடியவராகவும் நிறைந்த சகிப்புத் தன்மை உடையவராகவும் அவர் திகழ்ந்தார். அது சில சந்தர்ப்பங்களில் அவருக்கு எதிர்மாறான விமர்சனத்தையும் ஏற்படுத்தியது. ஆனாலும் அவர் தன்னுடைய செயல்பாட்டு நிலையை மாற்றி அமைக்கவில்லை. தலைமைகளுக்கு எப்போதும் விசுவாசமாக இருந்தார். சம்பந்தனை “சாம் அண்ணை” என்றே விழிப்பார். அவர் சொல்லை ஒருபோதும்

தொடர்ச்சி▼



# சேனாதி(பதி) இல்லாத தமிழரசு

தொடர்ச்சி▲

தட்டியதில்லை. கட்சியினுடைய பொதுச் செயலாளராக பணியாற்றிய காலத்தில் மிகவும் உத்வேகமாக பணியாற்றினார். வடக்கு மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக கூட்டமைப்பினுடைய அங்கத்துவக் கட்சிகள் அனைத்தும் இவரையே முன்மொழிந்த சூழ்நிலையில் இரா.சம்பந்தன் அதை ஏற்றுக் கொள்ளாத காரணத்தினால் தலைமையை மீறி அவர் தீர்மானம் எடுக்க முற்படவில்லை. 14-08-2013 வவுனியா வசந்தம் விடுதியில் நடைபெற்ற கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் சேனாதிராஜாவையே முதலமைச்சராக தெரிவு செய்ய வேண்டும் என கட்சியில் உள்ள சம்பந்தன், சுமந்திரன் தவிர அனைவராலும் வலியுறுத்தப்பட்டது. ஆனால் சாம் அண்ணை எடுக்கின்ற முடிவுக்குத் தான் இணங்குவதாகவே அவர் தெரிவித்தார். அவர் நினைத்திருந்தால் அவர் வடக்கு மாகாண சபை முதலமைச்சராகியிருக்க முடியும்.

ஆனால் தலைமைக்கு கட்டுப்பட்டவராகவே இருந்தார். அதை அவரே பிற்காலத்தில் மேடைகளில் கூறியும் வந்துள்ளார். கடிந்து கொள்ளாமல் எல்லோரையும் இன்முகத்தோடு ஓம் தம்பி, பேசுவோம் தம்பி, பார்ப்போம் தம்பி, யோசிப்போம் தம்பி, சந்திப்போம் தம்பி என ஐந்து தம்பிகளை வழக்கமாக தன் உரையாடலில் சேர்த்துக் கொள்வார். இது விமர்சனத்திற்கும் உள்ளாகியது.

2014 ஆம் ஆண்டு தமிழரசு கட்சியின் தலைமை பதவி வழங்கப்பட்டதிலிருந்தே இவர் பலராலும் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டார். அரசியல் ரீதியாகவும் கட்சி ரீதியாகவும் தீர்மானங்களை எடுப்பதற்கு சிலரில் தங்கி இருந்தார் என்கின்ற விமர்சனமும் இவர் மேல் சுமத்தப்பட்டது. தன்னோடு நம்பிக்கையாக – விசுவாசமாக – இருந்தவர்களை எல்லாம் புறம் தள்ளிவிட்டு, தான் நம்புகின்ற சிலரை மட்டும் அருகிலே அரவணைத்துக் கொண்டார். அவர்கள் இவரை விசுவாசித்தனரா என்பதைக் கூட புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் இவரிடம் இருக்கவில்லை என விமர்சனங்கள் உண்டு. அந்திம காலத்தில் அவருடைய அரசியல் செயற்பாடு மிகுந்த விமர்சனத்திற்குள்ளகியது. இதில் சுமந்திரன் தரப்பும் அரசியல் அறத்துடன் செயற்பட்டார்களா எனும் கேள்வி இல்லாமல் இல்லை.



இவரது கடந்த கால அத்தனை செயற்பாடுகளையும் வியந்து பார்த்த பலருக்கு ஏமாற்றம் அளிக்கக் கூடியதாகவே இவருடைய தலைமைத்துவம் காணப்பட்டது. மொத்தத்தில் இவர் ஒரு தலைவராகவே கட்சியில் இருக்கவில்லை. யாரோடும் பகைத்துக் கொள்ளாத நிர்வாகம் என்பது சாத்தியமற்றது. 2014 இல் இவர் தலைமை ஏற்றபோது மூத்த ஊடகவியலாளர் திரு வித்தியாதரன் அவர்கள் இப்பத்தியாளருக்கு அன்றைய தினமே மாநாட்டு மண்டபத்தில் வைத்துக் கூறினார். “இவருக்கு அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளது” என்று. அது பிற்காலத்தில் நிரூபிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் இவர் தோல்வி அடைந்த பின்னர் தலைவராக இருந்தும் இவருக்கு தெரியாமல் சம்பந்தன் – சுமந்திரனால் கலையரசனுக்கு தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது.

தமிழரசு கட்சியின் நீண்ட கால வரலாற்றில் நான்கு ஆண்டுகளுக்கு மேல் எவரும் தலைவராக இருக்கவில்லை. தந்தை செல்வநாயகம் கூட தலைவரில் இருந்து விலகிச் செயலாளராக இருந்துள்ளார்.

அந்த பாரம்பரியத்தை தான் கடைப்பிடிக்க வேண்டும் என சம்பந்தன் அடம்பிடித்து நான்கு ஆண்டுகளில் விலகி இவரை தலைவர் ஆக்கினார். இவர் 10 ஆண்டுகள் தலைவராக இருந்து விட்டார். தமிழரசுக் கட்சியின் கடைசி சவப்பெட்டிக்கு மாவை சேனாதிராஜாதான் ஆணி அடிப்பார் என திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் ஒரு பேட்டியிலே கூறியிருந்தார். அதுவும் ஏறக்குறைய சரியாகின்ற சூழ்நிலையில்தான்

தொடர்ச்சி▼



# சேனாதி(பதி) இல்லாத தமிழரசு






**தொடர்ச்சி▲**

இப்பொழுது தமிழரசு கட்சியின் நிலைமை காணப்படுகிறது.

ஒரு நீண்ட ஜனநாயகப் பாரம்பரிய விழுமியம் உள்ள கட்சி இன்று குழுக்களாக பிரிவடைந்து, வழிப்போக்கர்கள் கையில் சிக்குண்டு, சின்னா பின்னமாகி சிதிலமடைந்து நிற்கிறது. மாவை சேனாதிராஜாவின் இறப்போடு மேலும் இது பலவீனமான நிலையை எட்டக்கூடிய வாய்ப்புகளே அதிகம். மரண வீட்டில் கூட அரசியல் செய்கின்ற கைங்கரியத்தை தந்தை செல்வநாயகத்தின் கட்சியில் உள்ளவர்கள் செய்ய முற்படுவது தந்தை செல்வாவுக்கு சேறு பூசுவதற்கு ஒப்பானது ஆகும். இன விடுதலை அரசியலைப் புரிதல் இன்றி பதவி நலன்களுக்காய் பயன்படுத்தும் சந்தர்ப்பவாதிகளாகக் கட்சியில் இணைந்து கொண்டவர்கள் இவ்விதமான மூன்றாம் தர அரசியலில் ஈடுபடுகிறார்கள் என்பதே வேதனைக்குரிய வேடிக்கை. வரலாறு இவர்களை எள்ளி நகையாடும் என்பதை அறியாமல் இருப்பதுதான் இவர்களின் அரசியல் கோமாளித்தனம்.

ஆகவே மாவை சேனாதிராஜா இன விடுதலை அரசியலில் மிகப் பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தி விட்டுப் போகிறார். எஞ்சியுள்ள தமிழரசு கட்சியில் மிஞ்சியுள்ள எவரும் அவர் அளவுக்கு இன விடுதலை அரசியலில் நீண்ட நெடிய பாரம்பரிய இருப்பை தமதாக்கக் கூடியவராக இல்லை என்பதே வெற்றிடமாகும். இந்த வெற்றிடத்தை நிரப்புவது யார்? அறிஞர் அண்ணா கூறியது போல் காற்று இடைவெளியை நிரப்புமா? காலம் தலைவர்களை உருவாக்குமா? தொண்டர்கள் தேசத் திரட்சியை ஏற்படுத்தி ஐக்கியத்தோடு நிமிர்வார்களா? என்ன செய்யப் போகிறது தமிழரசு? ■





# மன்னார் மரியன்னை ஆலயம் நேற்று அபிஷேகம் செய்து திறந்து வைப்பு

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மன்னார் மரியன்னை ஆலய அபிஷேகம் மற்றும் திறப்பு விழா நேற்றைய தினம் சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் இடம் பெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் ஆலயம் அபிஷேகம் செய்யப்பட்டு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இதன் போது மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் கிறிஸ்து நாயகம் அடிகளார், அருட்தந்தையர்கள், அருட் சகோதரர்கள், ,அருட்சகோதரிகள் மற்றும் ஆயிரக்கணக்கான மக்களும் கலந்து கொண்டனர்.

ஆலயம் திறந்து வைக்கப்பட்டதை தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் குருக்கள் இணைந்து திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர்.













# மத்திய பட்ஜெட்டில் தமிழகம் புறக்கணிக்கப்படுவது ஏன்?

## முதல்வர் ஸ்டாலின் கேள்வி





"பொருளாதார ஆய்வறிக்கை, உயர் கல்வி நிறுவனங்களின் தரவரிசை அறிக்கை, நிதி ஆயோக் அறிக்கை என மத்திய அரசின் அனைத்து அறிக்கைகளிலும் முதன்மையான இடத்தைப் பிடிக்கிறது தமிழகம். பக்கத்துக்குப் பக்கம் தமிழகத்தின் செயல்பாடுகளுக்குப் பாராட்டுப் பத்திரம் வாசிக்கப்படுகிறது. ஆனால், நிதிநிலை அறிக்கையில் மட்டும் இந்த ஆண்டும் தமிழகம் முழுமையாகப் புறக்கணிக்கப்படுவது ஏன்?"

– இவ்வாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"மத்திய நிதிநிலை அறிக்கை என்றாலே தமிழகத்தைப் பொறுத்த வரை ஓரவஞ்சனைதானா? தமிழ்நாடு என்ற பெயர்கூட தொடர்ந்து இடம்பெறுவதில்லையே? எத்தனையோ கோரிக்கைகளை முன்வைத்தோமே, அதில் ஒன்றைக்கூடவா உறுதிசெய்து அறிக்கையில் சேர்க்க மனம் வரவில்லை? நெடுஞ்சாலைகள், ரயில்வே திட்டங்கள், கோவை, மதுரை மெட்ரோ ரயில் எதையுமே கொடுக்காதது ஏன்? எது தடுக்கிறது?

பொருளாதார ஆய்வறிக்கை, உயர் கல்வி நிறுவனங்களின் தரவரிசை அறிக்கை, நிதி ஆயோக் அறிக்கை என மத்திய அரசின் அனைத்து அறிக்கைகளிலும் முதன்மையான இடத்தைப் பிடிக்கிறது தமிழகம். பக்கத்துக்குப் பக்கம் தமிழகத்தின் செயல்பாடுகளுக்குப் பாராட்டுப் பத்திரம் வாசிக்கப்படுகிறது. ஆனால், நிதிநிலை அறிக்கையில் மட்டும் இந்த ஆண்டும் தமிழ்நாடு முழுமையாகப் புறக்கணிக்கப்படுவது ஏன்?

தமிழகம் ஏற்காத கொள்கைகளையும் மொழியையும் திணிப்பதில் காட்டும் ஆர்வத்தில் சிறு துளியையாவது நிதி ஒதுக்கீட்டில் காட்ட வேண்டாமா? மத்திய அரசானது தன்னுடைய திட்டங்களில் தன்னுடைய பங்குத் தொகையைக் குறைத்து கொண்டே வருவதால், மாநில அரசின் நிதிச்சுமை அதிகரித்துக் கொண்டே வருகிறது. பல்வேறு திட்டங்களில் மிகவும் குறைவாக மானியத் தொகையை வழங்கும் மத்திய அரசு, அதிலும் பல்வேறு கட்டுப்பாடுகளைத் தமிழகத்துக்கு மட்டும் விதித்துள்ளது.

விளம்பர மோகம் கொண்ட மத்திய அரசு, திட்ட விளம்பரங்களில் மத்திய அரசின் முத்திரை இடம் பெறாவிட்டால், திட்டம் சரியாகவும் செம்மையாகவும் செயல்படுத்தப்பட்டிருப்பினும், நமக்குச் சேரவேண்டிய திட்ட நிதியை விடுவிப்பதில்லை. விளம்பரம் ஒன்றையே பாராட்டும் மத்திய அரசு, மக்கள் நலனில் எந்தவொரு அக்கறையையும் காட்ட மறுக்கிறது.வெற்றுச் சொல் அலங்காரங்களும், வஞ்சனையான மேல்பூச்சுகளும் கொண்ட அறிக்கையின் மூலமாக இந்திய நாட்டு மக்களை வழக்கம் போல் ஏமாற்றும் பா.ஜ.கவின் பம்மாத்து நாடகம் தொடர்கிறது.

எந்த மாநிலத்தில் தேர்தல் நடைபெறவுள்ளதோ, எங்கு பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் உள்ளதோ அந்த மாநிலத்துக்கு மட்டும்தான் திட்டங்களும் நிதியும் அறிவிக்கப்படும் என்றால் 'மத்திய' நிதிநிலை அறிக்கை என இதனை அழைக்க வேண்டிய அவசியம் என்ன?" என்று குறிப்பிட்டுள்ளார்.

# கட்சி நிர்வாகிகள் களத்திற்குச் செல்ல தயங்கக்கூடாது; விஜய் அறிவிப்பு



தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பனையூர் அலுவலகத்தில் நிர்வாகிகளோடு ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதைதொடர்ந்து, விஜய் கடந்த 28 ஆம் முதல் 4 நாள்களுக்கு கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். மேலும், தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகளிடம் விஜய் நேர்காணல் நடத்தி வருகிறார்.

அதன்படி, 234 சட்டசபை தொகுதிகளுக்கும் பணிகளை தீவிரப்படுத்த 120 மாவட்ட செயலாளர்களில் பெரும்பாலானவர்கள் தேர்வு செய்யப்பட்டுவிட்டனர். அதில், முதல் கட்டம், 2 ஆம் கட்டம், 3 ஆம் கட்டமாக புதிதாக மாவட்ட செயலாளர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று தேர்வு செய்யப்பட்ட புதிய நிர்வாகிகள் மத்தியில் த.வெ.க. தலைவர் விஜய் உரையாடுகையில், 2026 ஆம் ஆண்டு இலக்கை அடைய என்ன செய்ய வேண்டுமோ அதை செய்வேன் என்றும், மக்கள் பணிகளை இனி தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், கட்சி நிர்வாகிகள் களத்திற்கு செல்ல தயங்கக் கூடாது. உங்கள் உழைப்பில்தான் கட்சியின் வளர்ச்சி உள்ளது.

நானும் உழைக்கிறேன், நீங்களும் உழையுங்கள், வெற்றி அடைவோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# கொங்கோவில் மோதல் 700 பேர் உயிரிழப்பு!

கொங்கோ குடியரசின் மிகப் பெரிய நகரமான கோமாவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் இடம்பெற்று வரும் கடுமையான மோதலில் 700 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ருவாண்டாவின் ஆதரவுடன் இயங்கும் எம்.23 கிளர்ச்சி படையினர் வடக்கு கிவு மாகாணத்தின் தலைநகரைக் கைப்பற்றியதை அடுத்து அங்கு மோதல் அதிகரித்துள்ளது.

இந்தநிலையில், அங்கு சுமார் 2,300 பேர் காயமடைந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

கிளர்ச்சியாளர்கள் தெற்கு கிவுவின் தலைநகரான புகாவு பகுதியை நோக்கி நகர்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

1990 ஆம் ஆண்டு முதல் கொங்கோ குடியரசில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்துள்ள நிலையில், கடந்த சில நாள்களாக மோதல் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# ஹிஸ்புல்லா அமைப்பின் மீது இஸ்ரேல் விமானப்படை தாக்குதல்





லெபனான் நாட்டில் பெகா பகுதியில் செயல்பட்டு வந்த ஹிஸ்புல்லா அமைப்பின் இலக்குகள் மீது இஸ்ரேல் விமான படை தாக்குதல் நடத்தியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

விதிமீறலில் ஈடுபட்டால் தாக்குதல் தொடரும் என இஸ்ரேல் எச்சரித்து இருந்த நிலையில், நேற்று முன்தினம் இந்த தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

ஹிஸ்புல்லா அமைப்பின் ஆயுத உற்பத்தி மற்றும் மேம்பாடு உள்ளிட்ட விடயங்களுக்காக பூமிக்கடியில் அமைக்கப்பட்டு இருந்த இராணுவ உட்கட்டமைப்பு மீதே இந்த தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இதேபோன்று, ஆயுதங்களை கடத்தி வேறிடங்களுக்குக் கொண்டு செல்வதற்காக சிரியா – லெபனான் எல்லைப் பகுதியில் அமைக்கப்பட்டு இருந்த, ஹிஸ்புல்லா அமைப்பின் உட்கட்டமைப்பு மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இஸ்ரேலை நோக்கி ஹிஸ்புல்லா அமைப்பின் ஆளில்லா விமானம் ஒன்று தாக்குதல் நடத்த முற்பட்டு உள்ளது.

இதனை இஸ்ரேல் விமான படை வழிமறித்து முறியடித்தது என்று இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.

இதன் தொடர்ச்சியாகவே, இஸ்ரேல் தரப்பில் இருந்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, போர்நிறுத்த ஒப்பந்தம் அடிப்படையில், இஸ்ரேல் பணய கைதிகள் மற்றும் பலஸ்தீனிய கைதிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 02.02.2025




இன்று முன்னேற்றத்துக்கு உகந்த நாள். உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக வெற்றி காண்பீர்கள்.

இன்று பணியிடத்தில் நல்ல முன்னேற்றமும் வளர்ச்சியும் காணப்படும். நீங்கள் உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் இன்றைய நாளை இனிமையாகக் கழிப்பீர்கள்.இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று உங்கள் நிதிநிலையில் வளர்ச்சி காணப்படும். உங்கள் சேமிப்பும் அதிகரிக்கும்.

இன்று சிறந்த ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.




இன்று நீங்கள் வருத்ததுடனும் மன உளைச்சலுடனும் காணப்படுவீர்கள். உங்கள் திறமைகளை சிறந்த முறையில் பயன்படுத்தால் முன்னேற்றம் கிட்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். திறமையாக பணியாற்ற நீங்கள் சிறப்பாக திட்டமிட வேண்டும்.

இன்றைய நாள் உங்கள் துணையிடம் கருத்துக்களை பரிமாறுவதற்கு உகந்த நாள் அல்ல. எனவே உங்கள் தொடர்புகளில் கவனம் செலுத்துவது சிறந்தது.

பங்கு வர்த்தகம் மூலம் நீங்கள் பணம் சம்பாதிக்கலாம். என்றாலும் உங்களால் அதிகமாக சேமிக்க இயலாது.

இன்று செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். அதிக நீரைப் பருகவும்.




இன்று இழப்புகள் ஏற்படாத வகையில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்களின் சில பணிகள் முடிக்கப் படாமல் இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் திறமையோடு முடிப்பதற்கு திட்டமிடல் அவசியம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு சிறிது வன்மையாக நடந்து கொள்வீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

அதிக பொறுப்புகள் காரணமாக அதிக செலவுகள் காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

வயிறு உப்பசம் காரணமாக அவதிப்பட நேரலாம். காரமான மற்றும் எண்ணெய் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்கவும். அதிக நீரைப் பருகவும்.




இன்று உங்கள் செயல்களில் மும்முரமாக இருப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்றைய நாளை முக்கிய முடிவுகள் எடுக்க பயன்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் பணி நிமித்தமான பயணம் காணப்படும். அதன் மூலம் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவதன் மூலம் ஒன்றாக செயல்படுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவு காணப்படும். இன்று எதிர் காலத்திற்காக பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்றைய செயல்களின் விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமைய சிறந்த முறையில் திட்டமிட வேண்டும். முக்கிய மான முடிவுகளை வேறு நாளைக்கு தள்ளிப் போடுதல் வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எச்சரிக்கையும் சிறந்த திட்டமிடலும் அவசியம்.

இன்று அமைதியாக இருக்கவேண்டும். உங்கள் துணையிடம் கடுமையாக நடந்து கொள்ள வேண்டாம். உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும். பணத்தை சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று சில ஏமாற்றங்கள் காணப் படும். அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். மற்றவர்கள் தரும் வாக்குறுதிகளை சார்ந்து இருக்க வேண்டாம். உங்கள் விருப்பங்கள் நிறைவேற நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்சிவசப்படுவீகள். இதனால் உங்கள் உறவில் அமைதியின்மை காணப்படும்.

பண வரவு காணப்பட்டலும் அதிகரிக்கும் செலவுகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உடல் உழைப்பின் காரணமாக கால் வலி ஏற்பட லாம். உடற் பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது நல்லது.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் நற் பலன்களை அடையலாம். பிரார்த் தனை மற்றும் இறை வழிபாடு இன்று சிறந்தது.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே உங்கள் பணிகளை கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல்கள் காணப்படும். இருவரும் கவனமாக உரையாட வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக் காது. இன்று கூடுதல் செலவினங்களை சமாளிக்க வேண்டியிருக்கும்.

பரபரப்பான பணிகள் காரணமாக தலைவலி அல்லது கால் வலி ஏற்படலாம். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று நற்பலன்கள் அதிகம் கிடைக் கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் பணியில் வளர்ச்சியும் முன்னேற்றமும் காணப்படும். சக பணி யாளர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள் வீர்கள். இதனால் உறவில் புரிந்துணர்வும் நல்லிணக்கமும் காணப்படும்.

பூர்வீக சொத்துக்கள் மூலம் பண வரவு காணப் படும். உங்கள் சேமிப்பை உயர்த்துவீர்கள்.

இன்று ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.02.2025




இன்று தடைகளையும் கஷ்டங்களை-ளயும் சமாளிக்க வேண்டியிருக்கும். நீங்கள் முயற்சி எடுத்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்களின் அகந்தைப் போக்கு காரணம்மாக உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையின் உணர்வுகளை கருத்தில் கொண்டு மதிப்பது நல்லது.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. கவனம் தேவை.

தேவையற்ற எண்ணங்கள் காரணமாக குழப்பம் மட்டுமன்றி தலைவலியும் ஏற்படும்.




உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக பாதுகாப்பற்ற உணர்வு ஏற்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற நீங்கள் திட்டமிட வேண்டும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.இருவரும் மனம் திறந்து பேசிக்கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் காணப்படும்.

குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை காணப்படும். அவர்களின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.




உங்கள் செயல்களை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும் ஒரு முடிவை செயலாக்குவதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். தகவல் பரிமாற்றத்தில் குறைபாடு காணப்படும்.

சக பணியாளர்களுடன் சூடான விவாதங்கள் அல்லது அகந்தை உணர்வுகள் தலை தூக்கும். அத்தகைய சூழ்நிலையை நீங்கள் உருவாக்காமல் இருப்பது சிறந்தது.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதிநிலைமை சாதகமாக இருக்காது. தேவையற்ற செலவுகளால் கவலை ஏற்படும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களில் கவனம் செலுத்துவது சிறந்தது.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். உங்கள் மனதில் நேர்மை எண்ணங்கள் காணப்படும். இதன் மூலம் நன்மைகள் நடக்கும்.

இன்று பணிகள் மும்மரமாக காணப்படும். என்றாலும் நீங்கள் உங்களுக்கு கொடுத்த பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் உறவில் அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படுகின்றது. உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். பூர்வீகச் சொத்து வகையில் எதிர்பாராத பணவரவு காணப்படுகிறது.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்றைய நாளைச் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

# முன்னாள் எம்.பி. ஜனா பயணித்த வாகனம் திருமலையில் விபத்தில்!



(க.சரவணன்)

தமிழரசுக் கட்சியின் மறைந்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காக மட்டக்களப்பிலிருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் (ஜனா) பயணித்த வானுடன் நேற்று திருகோணமலை உப்புவெளி பிரதேசத்தில் பின்னால் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் ஒருவர் காயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். திருகோணமலை உப்புவெளி வீதியில் சர்வோதயத்துக்கு முன் உள்ள பாதைசாரிக் கடவையில் பொதுமக்கள் கடக்கின்ற போது அதற்கு இடமளித்து வானை நிறுத்திய போது பின்னால் அதிக வேகத்தில் வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து நிறுத்தி வைக்கப்பட்ட வானின் பின் பக்கம் மோதி விபத்துக்குஉள்ளானதாகக் கூறப்படுகின்றது. மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் காயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் .

இது தொடர்பாக உப்புவெளி பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.